DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 19/2020**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | |
|---|---|---|---|
| Name | : **மணிவாசகம்** | Caste | : |
| Father Name | : **தங்கவேல்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **17.02.2026.**

**PW - 23**

**(1** முதல் **6** எதிரிகள் ஆஜர்**)**

**முதல் விசாரணை**

தற்சமயம் நான் திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம், ஒக்கரை கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு எரக்குடி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். மேற்படி கிராமத்தில் அப்போது எனக்கு உதவிக்காக பணி ஓய்வு பெற்ற பழனிவேல் என்பவர் என்னிடம் கையெழுத்து வாங்க 25.05.2019 அன்று வந்தார். அன்று எனது அலுவலகத்திற்கு முன்பு கார்த்திக் என்பவர் சிதம்பரத்தை காரை விட்டு

மோதியதாகவும், அந்த கார் நிற்காமல் சென்று விட்டதாகவும், அன்று மதியம் 3.00 மணியளவில் கார்த்திக் வீரப்பன் தோட்டம் அருகே இறந்து கிடப்பதாக ஊர் மக்கள் எனக்கு தகவல் சொன்னார்கள். நானும், பழனிவேலும் அந்த இடத்திற்கு சென்று பார்த்தோம். கார்த்திக் இறந்து கிடந்தார். சிறிது நேரத்தில் உப்பிலியபுரம் போலீசார் அங்கு வந்தார்கள். மறுநாள் மாலை உப்பிலியபுரம் போலீசார் என்னை அழைத்ததன் பேரில் தாத்தையங்கார் பேட்டை பேருந்து நிறுத்தம் அருகே நானும் பழனிவேலும் சென்றோம். அப்போது நேரம் மாலை 6.00 மணி இருக்கும். அப்போது உப்பிலியபுரம் போலீசார் இராஜசரவணன், பாலாஜி, மனோகரன், மூர்த்தி, ஹரிதாஸ், ஆகியோரை கைது செய்தார்கள். அவர்கள் ஆஜர் எதிரிகள் தான். அதன்பிறகு எதிரி இராஜசரவணனிடம் போலீஸ் வாக்குமூலம் வாங்கினார்கள். அதில் எதிரி ராஜசரவணன் விஏஓ அலுவலகம் பின்புறம் கட்டையை வைத்திருப்பதாக சொன்னார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் பழனிவேல் மற்றும் எதிரி ராஜசரவணன் கையொப்பமிட்டோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி (அடிக்கோடிட்ட பகுதி மட்டும் அடைப்புக் குறிக்குள் உள்ள பகுதி நீங்கலாக) **அ.த.சா.ஆ.11** ஆகும். பின்பு எதிரி மற்றும் போலிசாருடன் விஏஓ அலுவலகம் பின்புறம் சென்று சீமைக் கருவேல மரத்திற்குள்ளே மறைத்து வைத்திருந்த கட்டையை எடுத்து எதிரி ராஜசரவணன் ஆஜர் செய்தார். அதை ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார். அதில் நானும் பழனிவேலும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.12** ஆகும். அந்த கட்டை என்னிடம் காட்டப்படுவது தான். அது ஏற்கனவே அ.த.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1,3 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் முதல் விசாரணையில் சொன்ன விவரங்களைத் தான் போலிஸ் விசாரணையிலும் சொன்னேன். முதல் விசாரணையில் 25.05.2019 அன்று முன்னாள் உதவியாளர் பழனிவேல் எனது அலுவலகத்திற்கு கையொப்பம் வாங்க வந்ததாக போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை. மேற்சொன்ன காலக்கட்டத்தில் எனக்கு கிராம உதவியாளர் இல்லை. 25.05.2019 அன்று ஊர்மக்கள் எனக்கு தகவல் சொன்ன நேரம் என்ன இருக்கும் என்றால் 12.00 மணி இருக்கும். அவ்வாறு ஒரு தாக்குதல் சம்பவம் நடைபெற்றதாக எனக்கு கிடைத்த தகவலை நான் உப்பிலியபுரம் காவல் நிலையத்திற்கு சொல்லவில்லை. எரகுடி கிராமத்தில் உப்பிலியபுர காவல் நிலைய புறகாவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். அந்த புறகாவல் நிலையத்திற்கு நான் எந்த தகவலும் சொல்லவில்லை என்றால் சரிதான். இதுபோல் குற்ற சம்பவம் நடந்தால், அந்த விவரத்தை காவல் நிலையத்திற்கு தெரிவிக்க வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும். நான் வீரப்பன் வாழை தோட்டத்திற்கு சென்ற போது மாலை 3.00 மணியிருக்கும். நான் அந்த இடத்திற்கு போய் போலிசார் 5 நிமிடங்களில் அங்கு வந்து விட்டார்கள். சுமார் 1/2 மணி நேரத்திற்குள் போலிசார் பிரேதத்தை அங்கிருந்து எடுத்துச் சென்றுவிட்டார்கள். நான் போனபோது வீரப்பன் வாழை தோட்டத்திற்கு அருகே சிறிய சமாதி அருகே கார்த்திக் பிரேதம் கிடந்தது. அது சிமெண்ட் தரை தான். அந்த சிமெண்ட் தரையில் இரத்தக் கறை இருந்ததா என்றால் ஞாபகமில்லை. போலிசார் அந்த பகுதியை பார்த்து இரத்தக்கறையை பார்த்தார்களா என்றால் ஞாபகமில்லை. 26.05.2019 அன்று மாலை 6.00 மணிக்கு போலிசார் போன் செய்த போது நான் அலுவலகத்தில் இருந்தேன். போலிசார் வரச்சொன்னதின் பேரில் நானும், பழனிவேலும் கிளம்பி எனது இருசக்கர வாகனத்தில் தாத்தையங்கார் பேட்டை பேருந்து நிறுத்தத்திற்கு சென்றோம். எனது அலுவலகத்திற்கும் மேற்படி பேருந்து நிறுத்தத்திற்கும் 12

கிலோ மீட்டர் இருக்கும் என்றால் சரிதான். சுமார் 1/2 மணி நேரத்தில் அந்த பேருந்து நிறுத்தத்திற்கு போயிருப்போம். நாங்கள் அந்த பேருந்து நிறுத்தத்திற்கு போன போது போலிசாருடன் தாத்தையங்கார் பேட்டை ஊர்மக்கள் சுமார் 50 பேர் இருந்தனர். நாங்கள் போன போது போலிசார் இருந்தார்கள். போலிசார் அப்போது தான் அங்கு வந்தார்கள். எதிரிகள் அங்கு எப்போது வந்தார்கள் என்ற விவரம் தெரியாது. எதிரி ராஜசரவணன் சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் எழுதினார். தாத்தையங்கார் பேருந்து நிறுத்தத்தில் நாங்கள் சுமார் 3/4 மணி நேரம் வரை இருந்தோம். எங்கள் விஏஓ அலுவலகத்தின் பின்புறம் ஒவ்வொரு வார ஞாயிற்றுக்கிழமையும் வாரச்சந்தை நடைபெறும் என்றால் சரிதான். விஏஓ அலுவலகத்தை ஒட்டியுள்ள பின்புறம் சந்தைக்காக சுத்தமாக வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சந்தைக்கு பின்புறம் கல் வேலி போட்டு கல் நடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன சீமகருவேல மரங்கள் அந்த கம்பி வேலிக்கு பின்புறம் உள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன கட்டையில் இரத்தக்கறை இருந்ததா என்றால் ஞாபகமில்லை. நான் கையெழுத்து போட்ட தாளில் அந்த கட்டையில் இரத்தக்கறை இருந்ததாக எழுதப்பட்டதா என்பது பற்றி தெரியாது. என்னை போலிசார் அன்று உப்பிலியபுரம் காவல் நிலையம் அழைத்து சென்று விசாரணை செய்தார்கள். நான் உப்பிலியபுரம் காவல் நிலையத்திற்கு இரவு 9.00 மணி அளவில் சென்றேனா என்றால் ஞாபகமில்லை. உப்பிலியபுரம் காவல் நிலையம் நான் சென்ற பிறகு என்னை விசாரித்து டைப் அடித்து ஒரு கையொப்பம் வாங்கினார்கள். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் போலிசார் 1ம் ராஜசரவணன் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் எந்த தடயமும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. போலிசார் காவல் நிலையத்திலேயே தயாரித்த ஆவணங்களில் அவர்கள் கேட்டுக் கெண்டபடி கையொப்பம் மட்டும் செய்தேன் என்றால் சரியல்ல. தற்போது

போலிசார் கேட்டுக் கொண்ட படி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பில் இதே குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்வதாக கூறப்பட்டது.**

**மறுவிசாரணை – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.